# குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 மற்றும் இவை தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணைகள் சார்ந்த பயிற்சி

**அறிமுகம்**

இந்திய அரசு ஆறு முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி வழங்க 'குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009' ஐ இயற்றியது. இச்சட்டம் ஏப்ரல் 1, 2010 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 86 ஆவது சட்டத்திருத்தின்அடிப்படையில் சட்ட விதி 21–அ அடிப்படையில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. சட்டவிதி 21–'அ' வில் 'அரசு 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்கும் எனக் கூறுகிறது. இச்சட்டத்தை தமிழக அரசு அரசிதழில் 24, பிப்ரவரி, 2010 அன்று வெளியிட்டது. தமிழக குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிமுறைகள் 2011, உருவாக்கி 08.11.2011 அன்று அரசிதழில் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மேலும், தமிழக அரசு இச்சட்டத்தின் நிறைவேற்ற 12 அரசாணைகளை இயற்றியுள்ளது.

மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை ச் சட்டத்தை அமல்படுத்தும் மைய முனையமாகச் செயல்படும் என அரசு அறிவித்துள்ளது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் சார்பான செயல்பாடுகளைக் கண்காணிக்கும் மைய முகமை அலுவலராக மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் பணிபுரியும் இணை இயக்குநர் (திட்டம்) அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட அமலாக்கப் பிரிவு ஏ ற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக தனியாக தொலைபேசி (044–28278742, 28211391) இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

## இயல் 1.1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 மற்றும் இவை தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணைகள் சார்ந்த தயாரிக்கப்பட்ட பயிற்சி கையேடுகள்:

மத்திய அரசின் மூலம் கொண்டு வரப்பட்ட குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை ச் சட்டம், 2009, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 மற்றும் இவை சார்ந்து வெளியிடப்பட்ட அரசாணைகள் அடங்கிய கையேடு மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ளது.

மேலும், இச்சட்டம் சார்ந்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு விடைகள் கொண்ட புத்தகமும் மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அனைத்து கல்வி அலுவலர்களுக்கும், மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## இயல் 1.2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 மற்றும் இவை தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணைகள் சார்ந்து வழங்கப்பட்ட பயிற்சிகள்:

RTE சட்டம், விதிகள், அரசாணைகள் ஆகியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த, கல்வித் துறையோடு தொடர்புடைய அனைத்து அலுவலர்களுக்கும், இது தொடர்பாக பயிற்சி அளிக்க அரசு முடிவெடுத்து அதன் அடிப்படையில் அரசு முதன்மைச் செயலாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு இச்சட்டம் சார்ந்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டம், விதிகள் மற்றும் அரசாணைகள் தொடர்பான பயிற்சியினை முதன்மைக் கல்வி அலுவலர்கள், கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள், அனைவருக்கும் கல்வி திட்ட வட்டார வளமைய மே ற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் இச்சட்டம் சார்ந்து பல தொடர் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இப்பயிற்சிகள் பற்றிய குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.2.1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலர்கள், SSA முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர்களுக்கான பயிற்சி

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துவதில் கல்வி அதிகாரிகளது பொறுப்புகள் என்ன என்பதைத் தெளிவாகப் பட்டியலிட்டு அனைத்து மாவட்ட, ஒன்றிய அளவில் பணிபுரியும் அனைத்து கல்வி அதிகாரிகளுக்கும் இச்சட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும், தமிழக அரசின் விதிகள் மற்றும் அரசாணைகள் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலர்கள் அனைத்து மாணவர்களையும் பள்ளியில் சேர்த்தல், புதிய பள்ளிகளை உருவாக்குதல், பள்ளிகளுக்கான அங்கீகாரம் வழங்குதல், நலிந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவிலுள்ள குழந்தைகளுக்கு சுயநிதிப் பள்ளிகளில் சேர்க்கை கிடைக்கச் செய்தல் போன்ற பொறுப்பான பணிகளை செம்மையாக செய்ய அறிவுறுத்தும் பொருட்டு மாவட்ட அளவிலான கல்வி அலுவலர்கள் அனைவருக்கும் மாநில கல்வி ஆராய்ச்சி பயி ற்சி நிறுவனத்திலுள்ள SIEMAT மாநாட்டுக் கூடத்தில் ஜனவரித் திங்கள் 20ஆம் தேதி, 2012 அன்று பயிற்சி வழங்கப்பட்டது. **மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்** நிகழ்ச்சியைத் துவக்கி வைத்துப் பேசினார். இப்பயிற்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சிக் கையேடு, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் கைப்பிரதி மற்றும் தகவல் தொகுப்புப் பிரதியையும் வெளியிட்டார். இவற்றின் முதல் பிரதியை கூடுதல் தலைமைச் செயலர் Dr.T.S.ஸ்ரீதர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூடுதல் தலைமைச் செயலர் Dr.T.S.ஸ்ரீதர் அவர்கள் பேசும்போது சட்டத்தின் முக்கியத்துவம், சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள தர உயர்வுக்கான திட்டங்களைப் பற்றி எடுத்துரைத்தார். அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநர் திரு. மொஹம்மது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள் சட்டத்தில் கல்வித் தரம் மேம்பட தரப்பட்டுள்ள வழிமுறைகள் பற்றி விரிவாகப் பேசினார். கல்வித் துறையைச் சார்ந்த அனைத்து இயக்குநர்களும், இணை இயக்குநர்களும் இந்த பயிற்சியில் கலந்து கொண்டனர். மாநிலம் முழுமையிலிருந்து 215 அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர். இணை இயக்குநர் (திட்டம்) அவர்களின் தலைமையில் RTE வல்லுநர் குழு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றி விளக்கமாக பயிற்சி அளித்தது. பங்கேற்பாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநர், திரு.கு. தேவராஜன் அவர்களும் விளக்கமாக பதிலளித்தார்.

### 1.2.2. தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்கான தலைமைக் கருத்தாளர் பயிற்சி

அரசு மற்றும் தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல், அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளிகளில் தரமானக் கல்வியை அளிப்பதில் மிகுந்த பொறுப்புகள் உள்ளன. மேலும், இச்சட்டத்தினை தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களிலிருந்து, மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வரை அனைவரும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், அவர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவினை நிர்வகித்து, பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தினை தயாரிக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளி ஆகியவற்றிலிருந்து ஒரு தலைமை ஆசிரியர், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர் ஒருவர் மற்றும் 5 வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள் அடங்கிய 10 நபர் கொண்ட குழுவிற்கு தலைமை கருத்தாளர் பயிற்சி 2012, ஜனவரி, 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவன வளாகத்திலுள்ள SIEMAT மாநாட்டுக் கூடத்தில் நடத்தப்பட்டது. இச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் குறித்து தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.

### 1.2.3. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான கருத்தாளர் பயிற்சி

RTE சட்டம், விதிகள் மற்றும் அரசாணைகள் அனைத்து மாவட்டங்களிலுள்ள தலைமை ஆசிரியர்கள் ம ற்றும் ஆசிரியர்களுக்கு அளித்ததைப் போன்று ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள SSA திட்ட ஆசிரியர் பயி ற்றுநர்களுக்கு இப்பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டது. இதன் முதல் கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 145 பயி ற்றுநர்கள் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும் இப்பயி ற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 1.2.4. தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரிகுலேசன், ஆங்கிலோ–இந்தியன், அரசு உதவிபெறும், தனியார் ம ற்றும் மத்திய கல்வி வாரிய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான பயிற்சி

அனைத்துப் பள்ளிகளும் அங்கீகாரப் படிவம் –1ல் அளிக்கப்பட்டுள்ள விதிகளின்படி அங்கீகாரம் பெற வேண்டுமென RTE சட்டம் வலியுறுத்துகிறது. உரிய அலுவலரிடம், முறையான அங்கீகாரம் பெறாமல் எந்த பள்ளியும் நடத்தப்படக் கூடாது என்று RTE சட்டம் தெரிவிக்கிறது. இதனை மீறுபவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். மேலும், சுயநிதிப் பள்ளிகளில் தொடக்க வகுப்பில் 25% இடங்களை நலிவடைந்த பிரிவினருக்கும், வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கும் ஒதுக்க வேண்டும். இக்குழந்தைகள் எந்த வகையிலும், பிற மாணவர்களிடமிருந்து வேறுபடுத்தப்படக் கூடாது. இப்பள்ளிகள் எந்தவித நன்கொடையும் வசூலிக்கக் கூடாது. பெற்றோர்களுக்கோ அல்லது குழந்தைகளுக்கோ எந்தவிதத் தேர்வும் நடத்தக் கூடாது என இ ச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை அறிந்து கொள்வத ற்காகவும், அதற்கான தெளிவினைப் பெறவும், மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ–இந்தியன், அரசு உதவிபெறும், தனியார் மற்றும் மத்திய கல்வி வாரிய பள்ளி முதல்வர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு ஒருநாள் பயிற்சி பிப்ரவரி 1, 2012 அன்று மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டது.

திருமதி. டி.சபிதா, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை அவர்கள் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கேள்விகளுக்கு விடையளித்தார். அருகாமைப் பள்ளிகள், 25% மாணவர் சேர்க்கை, நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர், ஆசிரியர் கல்வித் தகுதி, தகுத் தேர்வு போன்றவை தொடர்பாக வினாக்கள் கேட்கப்பட்டது. 100 க்கும் மேற்பட்ட முதல்வர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

### 1.2.5. மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி

மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பு உள்ளதால், இங்கு பணிபுரியும் கல்வியாளர்கள் இச்சட்டம் தொடர்பாக முழுமையான பயிற்சி அளிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்டம், கொங்கு பொறியியல் கல்லூரியில் 2012, பிப்ரவரி 3, 4 மற்றும் 6, 7 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களில் அனைத்து மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் 680 கல்வியாளர்களுக்கு RTE சட்டம், விதிகள் மற்றும் அரசாணைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1.2.6. வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான முதன்மைக் கருத்தாளர் பயிற்சி

ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுர்கள், பள்ளிகளைப் பார்வையிட்டு தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி சார்ந்தும், பாடப்பொருள் சார்ந்தும் உரிய ஆலோசனைகளை வழங்குகின்றனர். எனவே, ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு இச்சட்டம் சார்ந்தும், விதிகள் மற்றும் ஆலோசனைகள் சார்ந்தும் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 5 வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் வீதம் 150 வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு 2012, பிப்ரவரி 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில், மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவன மாநாட்டு கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாசிரியர் பயிற்றுநர்கள் ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர்களுடன் இணைந்து மற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்டனர்.

### 1.2.7. சுயநிதிப் பள்ளி முதல்வர்கள், ஆசிரியர் சங்க அலுவலகப் பிரதிநிதிகள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்களுக்கான பயிற்சி

RTE சட்டம் தொடர்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட மாநில ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், மாவட்ட பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பாளர்கள் மற்றும் சுயநிதி பள்ளி தலைமை ஆசிரியர்கள், அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அடங்கிய சுமார் 1200 நபர்களுக்கு மாநில அளவிலான பயிற்சி 2012, பிப்ரவரி மாதம் 16 தேதி அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், IMAGE கலையரங்கத்தில் **மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி,** அவர்கள் தலைமையிலும், மதிப்புமிகு பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர், திருமதி.டி.சபிதா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சார்ந்து தயாரிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய கையேடு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்பயிற்சியில் அனைவருக்கும் கல்வித் திட்டம், மாநில திட்ட

இயக்குநர், திரு. முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள் உள்பட அனைத்து இயக்குநர் பெருமக்கள், இணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் பங்கேற்பாளர்கள் அலுவலர்களுடன் கலந்துரையாடி கேள்விகளைக் கேட்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. சுயநிதிப் பள்ளிகளில் 25% மாணவர் சேர்க்கை, பள்ளிக் கட்டணம் திருப்பி செலுத்துதல், பள்ளி மேலாண்மைக் குழு நிறுவுதல் மற்றும் அதன் பணிகள், ஆசிரியர் நியமனம் மற்றும் கல்வித் தகுதி, மாணவர் ஆசிரியர் விகிதம், பள்ளி அங்கீகாரம், சுயநிதிப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி, புதியப் பாடப்புத்தகம் போன்றவை சார்ந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு பள்ளிக் கல்வித் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களால் விடையளிக்கப்பட்டது.

### 1.2.8. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான மாவட்ட அளவிலான பயிற்சி

மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மே ற்பார்வையாளர் மற்றும் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு RTE சட்டம், விதிகள், அரசாணைகள் ம ற்றும் இவை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் சார்ந்து 2012, பிப்ரவரி 14,16 ஆகிய தேதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1.2.9. அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட RTE பயிற்சி

அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் 2012, பிப்ரவரி 18 அன்று தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள குறுவள மையங்களின் மூலம் (CRC) தொடக்க மற்றும் உயர்தொடக்க வகுப்பு ஆசிரியர்களுக்கு RTE தொடர்பான பயிற்சி ஒன்றிய அளவில் பயிற்சி பெற்ற உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1.2.10. மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு RTE பயிற்சி

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு RTE சட்டம், விதிகள், அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் சார்ந்து ஒருநாள் பயிற்சி 2012, மார்ச் 3 அன்று RTE சட்டத்தில் பயிற்சி பெற்ற மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை மாவட்டத்தில், இப்பயிற்சி சேத்துப்பட்டு, கிருத்துவக் கல்லூரி மேனிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. டி. சபிதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சுமார் 280 முதல்வர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை, மாணவர் சேர்க்கைக்காக தேர்வு நடத்தாமல் இருத்தல், நலிவடைந்த பிரிவினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான 25% ஒதுக்கீடு, பள்ளி கட்டணத்தை திரும்பப் பெறுதல், ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதி, ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் போன்றவை சார்ந்து மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இணை இயக்குநர் (திட்டம்), முனைவர். எம். பழனி ச்சாமி, அவர்களால் விளக்கி கூறப்பட்டது.

### 1.3. அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள பொதுமக்களுக்கு அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்தி இச்சட்டம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் **30** தன்னார்வளர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு RTE சட்டம், விதிகள், அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் சார்ந்த பயிற்சி அளித்து இவர்கள் மூலமாக பொதுமக்களுக்கு கலை நிகழ்ச்சிகள் மூலம் RTE சட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.